உயிரியல்

ov.lk

கூர்ப்புக் கொள்கைகள்



e තක්සලාව™ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 3.1.1: உயிரின் கூர்ப்புச் செயன்முறையை பகுப்பாய்வு செய்வர்.

கூர்ப்புக் கொள்கைகள்

ஒரு நீண்ட காலப்பகுதியில் ஒரு சந்ததியிலிருந்து மறுசந்ததியில் குடித்தொகையின் பாரம்பரியச் சேர்க்கைகளில் ஏற்படும் மற்றம் என கூர்ப்பு வரையறுக்கப்படுகின்றது. கூர்ப்புச் செயற்பாடு நடைபெறுவதற்கு பல மில்லியன் ஆண்டுகள் தேவைப்படலாம்.

பிரதான கூர்ப்புக் கொள்கைகள்



இக் கொள்கையின் இரு பிரதான **தத்துவங்கள்**

⇒ பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை

⇒ பெற்ற இயல்புகளின் தலைமுறையுரிமை

பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை

அதிகளவில் பயன்படுத்தப்படும் உடற்பகுதிகள், பெரிதாகவும் வலிமையுள்ளதாகவும் உருவாகின்றன. பயன்படுத்தாவிட்டால் அவை விருத்தி குன்றிச் செல்லும்.

உதாரணம்

ஒட்டகச்சிவிங்கி உயரமான கிளைகளில் உள்ள இலைகளைப் பெற

தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பெற்ற இயல்புகளின் தலைமுறையுரிமை

ஒரு அங்கி சூழல் தேவைகளைப் பொறுத்து தனது வாழ்க்கைக் காலத்தில் இசைவாக்கங்களைப் பெறுகின்றது. அவ் அங்கியானது தான் பெற்றுக்கொண்ட இசைவாக்கங்களை தனது எச்சங்களிற்குக் கடத்துகின்றது. இதனால் எச்சமானது குறிப்பிட்ட சூழலில் வாழ்வதற்கேதுவான பொருத்தமான/கூடிய இசைவாக்கத்தைப் பெறுகின்றது.

உதாரணம்

ஒட்டகச்சிவிங்கிகள் நீண்ட தசை செறிந்த கழுத்துப் பகுதியை பெற பல தலைமுறை அங்கத்தவர்கள் உயரமான (கிளைகள்) பகுதிகளை நோக்கி கழுத்தை நீட்டிய செயற்பாடுகள் வழிசமைத்தன.

டாவின் - வலஸ் கொள்கை

சூழலில் இருந்து டாவின் இரு தோற்றப்பாடுகளை அவதானித்தார்.

டாவினின் அவதானிப்புக்கள்.

1. குறித்த ஒரு இனக் குடித்தொகை ஒன்றில் காணப்படும் (சிறப்பான)பாரம்பரிய இயல்புகளிற்கிடையில் வேறுபாடுகள் காணப்படுதல்.
2. ஒவ்வொரு இனமும் தமது சூழலிலும் தங்குமளவிலும் கூடிய எச்சங்களை உருவாக்குதல்.

குடித்தொகை ஒன்றினுடைய குறித்த சிறப்பான தன்மைகளாக (இயல்புகளாக),

⇒ சிறப்பாக தப்பி வாழ்வதற்கான பண்புகளைக் கொண்டிருத்தல்.

⇒ இனப்பெருக்கத்தின் மூலம் அதிகளவு எச்சங்களை உருவாக்கும் தன்மை

ஆகியன காணப்படுகின்றன.

தப்பிவாழ்தல், மற்றும் குடித்தொகைக்கிடையிலான உற்பத்தி ஆகியவற்றில் காணப்படும் வேறுபட்ட தன்மைகள், குடித்தொகையில் சாதகமான இயல்புகள் காணப்படும் தன்மையை மேலும் முன்னெற்றகரமானதாக மாற்றும்.

தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



புதிய டாவின் கொள்கை Neo Darwinism

டாவினின் இயற்கைத் தேர்வுக் கோட்பாடு சார்ந்த உயிரியல் பாரம்பரியத்திற்கு அடிப்படையாக,

⇒ மென்டலின் பிறப்புரிமையியல்


⇒ குடித்தொகைப் பிறப்புரிமையியல்.

தொடர்பான அறிவைக் கொண்டு புதிய - டாவின் - கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



கணிப்பீடு

- Lamark கொள்கைக்கு அடிப்படையான விடயங்களை படங்களின் உதவியுடன் சேகரித்துக் கொள்ளல்.
- Darwin - தனது ஆராய்ச்சிக்கு பயன்படுத்திய தீவுகள் எடுத்த காலம், தெரிவு செய்த உதாரணங்கள், கொள்கையை பிரசுரித்த காலப்பகுதி , பிரசுரத்தின் பெயர் என்பன தொடர்பான தகவல்கள் திரட்டும் பதிவை உருவாக்கிக் கொள்ளல்.
- Lamark, Darwin கொள்கைகள், தற்போதுள்ள மூலக்கூற்று இரசாயனவியல் கொள்கைளுடன் எவ்வாறு இடைவினை கொள்கின்றன எனும் தலைப்பில் உமது கருத்துக்களைப் பதிவு செய்க.



தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk